DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No.ST.C. No. 185/2024

**பு.சா. 1 – காண்ஸ்டன்டினா க–பெ.** **நாள் – 09.10.2025.**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என் பிரமாண வாக்குமூலம், புகார் மற்றும் வழக்கறிஞர் முன்னறிவிப்பில் கண்டுள்ள அனைத்து விவரங்களும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி பிரமாண வாக்குமூலம், புகார் மற்றும் வழக்கறிஞர் முன்னறிவிப்பில் ரூ. 7,00,000/– மற்றும் ரூ.2,00,000/– ஆகியவற்றினை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியினை குறிப்பிட்டுள்ளதா என்றால் 01.07.2023 ல் கொடுத்துள்ளேன். அந்த தேதி குறிப்பிட்டுள்ளேன். என் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி எண். 4 முதல் வரியில் சொல்லியுள்ளதற்கு மாறாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு. தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் எழுதப்பட்டுள்ள தேதி மற்றும் பெயர் எழுதியுள்ள எழுத்தக்கள் எல்லாம் என்னுடைய கையெழுத்து என்றால் இல்லை. என்னுடைய தனிப்பட்ட வங்கி கணக்கில் இருந்து ரூபாய் 2,00,000/– மற்றும் பள்ளியின் வங்கி கணக்கில் இருந்து ரூபாய் 1,00,000/– ஆகியவை அனுப்பியதற்கான வங்கி கணக்கு வரவு செலவு பட்டியல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கான வரவு செலவு பட்டியலை நான் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு.

2. நான் பள்ளி நடத்தி வருவதாக சொல்லப்படும் சமயத்தில் பள்ளி வங்கி கணக்கில் இருந்து பணம் அனுப்பியுள்ளதாக சொல்லப்படும் போது அதற்கு பராமரித்து வரும் அன்றாட விவரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பள்ளிக்கும் இந்த வழக்கிற்கும் நேரடி தொடர்பில்லை. நான் அந்த பள்ளியின் தாளாளர். பள்ளி கணக்கில் இருந்து பணம் அனுப்பியதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கு விரோதமாக பள்ளி கணக்கிற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்று சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. எதிரி ஒரு சாதாரண அலைப்பேசி கோபுரத்தில் வேலை செய்யும் ஒரு நபர் என்றும், அவருக்கு நான் வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு ரூபாய் பத்து இலட்சம் கொடுத்ததாகவும், எதிரி ரியல் எஸ்டேட் செய்ததாக சொல்லி பணம் வாங்கியதாக வழக்கிறக்காக குறிப்பிட்டுள்ளேன் என்றும் அது தவறு என்றால் தவறு, அவர் அவ்வாறு தான் சொன்னார். இந்த வழக்கு காசோலை தவிர மேலும் ஒரு பூர்த்தி செய்யப்படாத காசோலையினை ரூபாய் ஒரு இலட்சம் வங்கி கணக்கில் இருந்து கொடுத்துவிட்டு வாங்கி வைத்துள்ளார் என்று சொன்னால் அது தவறு. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியினை தவறுதலாக சொல்வதாலும், அதிகப்படியான தொகை பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்ததாக சொன்னால் அது தவறு, அந்த தேதியில் தான் வங்கி மூலம் பணம் அனுப்பி கையிலும் பணம் கொடுத்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை.

3. எனது பிரமாண வாக்குமூலத்தின் 4 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள தேதியும் இந்த குறுக்கு விசாரணையில் நான் பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள தேதியும் முன்னுக்கு பின் முரணாக உள்ளதாலும், நான் உண்மையாகவே பணம் கொடுத்திருந்தால் சரியான தேதி குறிப்பிட்டிருப்பேன் என்றும் ஆனால் நான் பணம் தரவில்லை என்பதால் தான் இந்த பிரமாண வாக்குமூலத்தில் வேறுபாடு உள்ளது என்று சொன்னால் தவறு, நான் பணம் கொடுத்துள்ளேன், நான் சொன்ன தேதி சரி.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.